


இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, இளைஞரணியின் அடுத்தக்கட்டப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். மேலும் இளைஞரணி மாநாட்டுக்கான அறிவிப்பு வெளியான நாள் முதல், மாநாட்டு நாள் வரை நம் மாநில உரிமை மீட்பு மாநாட்டின் வெற்றிக்காக அயராது உழைத்த இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அன்பையும், நன்றியையும் தெரிவித்து, நினைவுப் பரிசை வழங்கினார்.



கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 75 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு 'குறிஞ்சி' முகாம் அலுவலகத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) நிதியிலிருந்து செஸ் கிராண்ட் மாஸ்டரும், அர்ஜுனா விருது பெற்றவருமான செல்வி.ஆர்.வைஷாலி அவர்களுக்கு சர்வதேச போட்டிப் பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.15,00,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



அரசுப்பள்ளிக்கு தன்னுடைய நிலத்தை தானமாக வழங்கிய மதுரை ஆயி அம்மாள் அவர்கள், முதலமைச்சரின் சிறப்பு விருதினை குடியரசு தினத்தில் பெற்றதையொட்டி அவருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தலில்

# மக்களிடம் அரசின் திட்டங்களைக் கூறி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம்!

## திருச்சி வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, ஜன. 29 -

திருச்சி தென்னூரில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி மணிமண்டபத்திலும், விராலிமலை சண்முகம் மணிமண்டபத்திலும், பல்வேறு அரசியல் கட்சியினர் மொழிப்போர்த் தியாகிகள் நாளன்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர் தமிழ் மொழியை பாதுகாக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இந்தி மொழி திணிப்பை எதிர்த்த மொழிப் போராட்டத்தில் அன்னை தமிழுக்காக கடந்த 25.01.1964 ஆம் நாள், கீழப்பழுவூர் சின்னசாமியும், கடந்த 25.02.1965 ஆம் நாள் விராலிமலை சண்முகமும் உயிர்நீத்தார்கள். அவர்கள் இருவருக்கும் திருச்சி தென்னூர் உய்யக்கொண்டான் ஆற்றின் கரையில் தனித்தனியாக மணிமண்டபங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

மொழிப்போர்த் தியாகிகள் நினைவு மண்டபத்திற்கு பேரணியாக வந்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர், கழகத் தொண்டர்கள், நிர்வாகிகள், தியாகிகள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் பேரணியின் முடிவில் திருச்சி தென்னூர் உழவர் சந்தை அருகே தி.மு.க. சார்பில் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.



அந்த கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில் ...

விராலிமலை சண்முகம், கீழப்பழுவூர் சின்னசாமி உள்ளிட்ட மொழிப்போர்த் தியாகிகள் செய்த தியாகத்தால் இன்று தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. இன்றும் இந்தியை கற்றுக் கொள்ளுங்கள். இந்தி கற்றால் தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என பலர் பேசி வருகிறார்கள். ஆனால் உண்மையான நிலை என்பது இந்தி பேசக்கூடிய வடமாநிலங்களைச் சேர்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்டோருக்கு தெரியும். அவர்கள் தமிழ்நாட்டிற்கு தான் வேலை தேடி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மாநிலங்களில் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

நாம் இருமொழிக் கொள்கையை பின்பற்றி ஆங்கிலம் கற்றுக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்பு தி.மு.க. தொண்டர்களிடையே சுறுசுறுப்பு சற்று குறைவாக இருக்கிறது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சி மக்களவைத் தொகுதியை தி.மு.க.விற்கு ஒதுக்க வேண்டும் என தி.மு.க. தொண்டர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இது குறித்து நான் தலைவரிடம் பேசுவேன்.

திருச்சி தொகுதியை தி.மு.க.வுக்கு ஒதுக்கிறார்களோ? கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்குகிறார்களோ? யாருக்கு ஒதுக்கினாலும் நாம் அவர்களை வெற்றி பெற செய்ய பாடுபட வேண்டும்.

திருச்சி தொகுதியில் கடந்த 45 ஆண்டுகாலம் தி.மு.க. போட்டியிடவில்லை. அதனால் இத்தொகுதியை இந்த முறை தி.மு.க.விற்கு ஒதுக்கச்சொல்லி தலைவரிடம் கேட்போம். திருச்சி மக்களவை தொகுதியை தி.மு.க.விற்கு ஒதுக்கினால் மகிழ்ச்சி, இல்லை என்றால் தலைவர் என்ன கூறுகிறாரோ அதனை செயல்படுத்துவோம்.

உங்களால் வெற்றி பெற முடியுமா என தி.மு.க.வை பார்த்து சிலர் கேட்கிறார்கள். நிச்சயமாக தி.மு.க. தான் வெற்றி பெறும்.

அனைத்து யுக்திகளையும் பயன்படுத்தி தி.மு.க.வை வெற்றி பெறச் செய்வோம். மக்கள் தி.மு.க.விற்கு தான் ஆதரவு அளிப்பார்கள்.

மகளிர்க்காக பல்வேறு திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. பெண்கள் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்களோ அந்த கட்சி தான் வெற்றி பெறும் அந்த வகையில் பெண்கள் தி.மு.க.விற்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

வரும் தேர்தலில் தி.மு.க.வை வெற்றி பெற செய்வோம் என மொழிப்போர்த் தியாகிகள் நினைவு நாளில் சூளுரைப்போம் என்றார்.

கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலத்தில் நடைபெற்ற நீலகிரி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் அவர்களின் 60வது நினைவு தினத்தில் திருவாரூர் காட்டூரில் உள்ள அவரது நினைவிடத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த சோமாஸ் கந்தன், தஞ்சை இளங்கோவன், ஒன்றியச் செயலாளர் சேகர் கலியபெருமாள், நகரச்செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், மாணவரணி அமுதா.ஆர் சந்திரசேகர், ஊராட்சி மன்றத் தலைவர் விமலா பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் மலரஞ்சலி செலுத்தினர்.



நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலத்தில் நடைபெற்ற திருப்பூர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் க.செல்வராஜ், இல.பத்மநாபன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.